[1978 செப்டம்பர் 11

தேசிய பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்.

*வினு எண் 150— திரு. கு. ரமணி: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-ஆம் வருடத்திற்கான போனஸ், பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 1977-ம் வருட தீபாவளி பண்டிகையின்போது கொடுத்த நேரத்தில் தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் கீழுள்ள பஞ்சாலைகளில் எல்லாம் கொடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், தனியார் பஞ்சாலைகளில் கொடுக்கப் பெற்ற விகிதப்படி கொடுக்கப்பட்டதா? அல்லது குறைவாகக் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) தேசிய பஞ்சாலை கழகத்தின் கீழுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 1976-77 ஆண்டுக்கு போனஸ் சட்டத்தின் கீழ் குறைந்த பட்ச போனஸ் 8.33 சதம் கொடுக்கப்பட்டது என தேசிய பஞ்சாலைக் கழகம் (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி) அறிவித்திருக்கிறது.

(ஆ) உடுக்குறியிடாத வினுக்கள்.

சென்னையில் மழையினுல் பாதிக்கப்பட்ட குடிசைகள்.

வினு 301— திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடந்த 1976 அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த மழையினுல், சென்னை நகரில் எத்தனைக் குடிசைகள் பாதிக்கப்பட்டன?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட உதவிகள் யாவை?

விடை—(அ) 69,596 குடிசைகள்,

2,46,176 நபர்கள்.

(ஆ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக அளிக்கப்பட்ட தொகை மொத்தம் ரூ. 47,64,325

வழங்கப்பட்ட லுங்கிகள் .. 95,701

வழங்கப்பட்ட புடவைகள் .. 95,701